# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, திசெம்பர் மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச.வ.ஓ. (கூட்) 3/2009*

### மஹிந்தானந்த அலுத்கமகே மன்றத்தை கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

"மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண் ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்கு மாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" என குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதன்பின்னர் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் "மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலா மென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். மஹிந்தானந்த அலுத்கமகே மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) தேவையிலுள்ள பாடசாலைச் சிறுவர்களின் கல்வியைத் தொடர்வதற்கு அவர்களை இயலச்செய்ய அவர்களுக்கு பரிசில்களையும் புலமைப்பரிசில்களையும் அளித்தலும் அவர்களை ஒழுங்காகப் பாடசாலைக்கு சமுகமளிக்க ஊக்குவித்தலும் ;

(ஆ) மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் அவர்களுக்கு உதவுவதற்கென நடமாடும் நூல்நிலையம் உட்பட நூல்நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும்;

(இ) பாடசாலைச் சிறுவர்களின் கல்வி செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் கருத்தரங்குகள், செயலமர்வு கள், விரிவுரைகள், கண்காட்சிகள் மற்றும் கல்விச் சுற்று லாக்களை ஒழுங்குபடுத்துதல் ;

(ஈ) பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் உயர் தொழில்சார் அறிவை உயர்த்துவதற்கு அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு கடன் திட்டங்கள் மற்றும் வேறு உதவிகளை வழங்குதல்;

(உ) பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பாடநெறிகளைத் தொடர தெரிவு செய்யப்பட்ட திறமை யான மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை அளித்தல்;

(ஊ) பாடசாலையை விட்டுவிலகியவர்களுக்கு சுயதொழில் வாய்ப்பு, கடன்கள் மற்றும் சேமிப்புத் திட்டங்கள் ; அத்து டன் வாழ்க்கைத் தொழிற்சார் பயிற்சி மற்றும் கணனி பயிற்சி நிலையங்களை அறிமுகப்படுத்தல்;

(எ) தேவையிலுள்ள சிறுவர்களின் ஆரம்ப சிறுபராய அபிவிருத்திக்கென முன்னிலைப் பாடசாலைகளைத் தாபித்தலும் பராமரித்தலும் ;

(ஏ) சொந்தக் காணிகள் மற்றும் வீடுகள் இல்லாத தேவையிலுள்ள குடும்பங்களுக்கு காணிகள் மற்றும் வீடுகளை அளித்தல் ;

(ஐ) வைத்தியசாலைகளுக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்குதலும் தேவையிலுள்ளவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் மருத்துவ நிவாரணம் மற்றும் உணவை வழங்குதலும், இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் முதியோர்களுக்கென வீடுகளை தாபித்தலும் பேணுதலும் அத்துடன் சிறுவர்களுக்கும் முதியோர்களுக்குமென சிறுவர் இல்லங்கள் மற்றும் நாள் கவனிப்பு நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் தொடர்பிலான தகவலைப் பரப்புவதற்கு அவசியமானவாறான அத்தகைய புத்தங்கள், நாளேடு, செய்திக்குறிப்புகள் மற்றும் செய்தித்தாள்களை பிரசுரித்தல், வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல் ; அத்துடன்

(ஓ) பார்வையற்றோர், காதுகேளாதோர் மற்றும் வாய்பேசாதோரான ஆட்களின் தேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கும் உதவுதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் இச்சட்டத்தின் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படும் ஒன்பது பேரைக் கொண்ட பணிப்பாளர்கள் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் தாபக உறுப்பினரான கௌரவ அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே பணிப்பாளர்கள் சபையின் முதலாவது தவிசாளராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களைக் கொண்டதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களை கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கென பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி கடனெடுத்தல் அல்லது பணத்தைத் திரட்டல்;

(ஆ) பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் முறையொன்றில் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துகின்ற நோக்கில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நிதிகளைப் பயன்படுத்தல்;

(இ) பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான ஏதேனும் வங்கி அல்லது வங்கிகளில் வங்கி கணக்குகளைத் திறத்தல், பேணுதல் மற்றும் மூடுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை கொண்டு நடாத்த தேவைப்படும் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை தொழிலிலமர்த்தல் மற்றும் நீக்குதல்; அத்துடன்

(உ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைதலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை மூலம் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் அல்லது விசேட பொதுக்கூட்டமொன்றில் பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) பதவி தாங்குநர்களின் தேர்தல், அலுவலர்களின் பதவிக் காலம், பதவி நீக்கம் அல்லது பதவி வெற்றிடம் அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்கள் மற்றும் கடமைகள்;

(ஆ) பதவி தாங்குநர் தவிர்ந்த பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் தேர்தலும் பதவிக் காலமும், அத்துடன் அவர்களது தத்துவங்களும் கடமைகளும்;

(இ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கம், சேர்த்துக்கொள்ளுதல், மீளப்பெறுதல் மற்றும் உறுப்புரிமைக் கட்டணங்கள்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிர்வாகமும் முகாமையும், அதனது நிதியங்களின் கட்டுக்காப்பு மற்றும் அதனது கணக்குகளின் பேணுதலும் கணக்காய்வும் ;

(உ) பணிப்பாளர்கள் சபையின் ஏதேனும் கூட்டத்தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிமுறைகள் மற்றும் அதற்கான கூட்டநடப்பெண் அத்துடன் அதில் நடாத்தப்படவேண்டிய அலுவல்கள் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும் அதனது குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றது மான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**7**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பதன் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் எடுக்கவும், வைத்திருக்கவும் சட்டத்தில் இயலுமானதாதலாலும் ஆற்றல் உடையதாதலாலும் வேண்டுமெனப்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவையும், மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்.*

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்றுள்ள மன்றத்தின் எல்லாக் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமெனப்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதி யாக உள்ள எல்லாத் தனிசுகளும், ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வருமதியாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கணக்குகளும் கணக்காய்வும்.

**11.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் முகாமைச் சபையால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராகவுமுள்ள ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

***12.*** *கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக் கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாள மாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராக கையொப்பமிடுவதினின்றும் தனிவே றானதாதலும் வேண்டும்.*

*கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

***13.*** *கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப் படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை யொத்த அத்துடன் அவற்றின் 06 ஆம் பிரிவின்கீழ் அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனம் அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல் லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கலைக்கப்படும்போது அல்லது கலைப்பிற்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.*

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

***14.*** *இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***15.*** *இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்